# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2116/49 - 2019 මාර්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.03.28

*2116/49 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 15/ 2014* (II)

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 57 ஆம் பிரிவின்கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்காகவும்
அதன் சார்பிலும்.

கொழும்பு,
*2019*, பெப்புருவரி *18*.

விதிகள்

*1.* இவ்விதிகள் *2019* ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (கனரக நிர்மாண எந்திரத் தொகுதியையும் சாதனங்களையும் பதிவுசெய்தல்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


1A - PG 4458 — 517 (2019/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இதற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கனரக நிர்மாண எந்திரத் தொகுதியினதும் சாதனங்களினதும் சொந்தக்காரர் ஒருவர், (இதனகத்துப் பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் அத்தகைய கனரக நிர்மாண எந்திரத்தொகுதியும் சாதனங்களும் பதிவுசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய கனரக நிர்மாண எந்திரத் தொகுதியை மற்றும் சாதனங்களைப் பயன்படுத்துதலாகாது.

3. (1) இரண்டாம் விதியின்கீழ் பதிவுச் சான்றிதழொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றுடன் சேர்த்து அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்தில் அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) மூன்றாம் விதியின் (1) ஆம் உப விதியின்கீழான ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழும் வீதியில் ஓடுகின்ற எந்திரத்தொகுதிக்கான செல்லுபடியான அரசிறை உரிமத்தின் பிரதியும் ;

(ஆ) எந்திரத் தொகுதியின் அல்லது சாதனங்களின் சொத்தாண்மையைக் குறித்துரைக்கின்றதான சொந்தக்காரரிடமிருந்தான சத்தியக்கடதாசி ஒன்றும் சொத்தாண்மையை எண்பிப்பதற்கான வேறெவையேனும் ஆவணங்களும் ; அத்துடன்

(இ) இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து எந்திரப் பொறியியல் என்ற துறையில் பட்டம் பெற்ற எந்திரப் பொறியியலாளரொருவரினால் விண்ணப்பத் திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியினுள் வழங்கப்பட்டதும், பயன்படுத்தப்படக்கூடிய தன்மை தொடர்பானதுமான எந்திரத் தொகுதியினதும் சாதனங்களினதும் நிலைமை பற்றிய அறிக்கை.

(3) இவ்விதியின் கீழான விண்ணப்பமொன்று கனரக நிர்மாண எந்திரத்தொகுதியினதும் சாதனங்களினதும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, அவசியமானவிடத்து, மேலதிகத் தகவல்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்பகாரரொருவரைத் தேவைப்படுத்தலாம்.

4. மூன்றாம் விதியின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி விண்ணப்பத்திலும் ஆவணங்களிலும் அடங்கியுள்ள கருமங்களைக் கவனத்துள் கொண்டதன் மீது, ஒன்றில் அத்தகைய எந்திரத் தொகுதியை அல்லது சாதனங்களைப் பதிவுசெய்து பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் அல்லது அவரினாற் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக அத்தகைய எந்திரத் தொகுதியை அல்லது சாதனங்களைப் பதிவுசெய்ய மறுத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி அவரது முடிபு பற்றி விண்ணப்பகாரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எந்திரத் தொகுதியை அல்லது சாதனங்களைப் பதிவுசெய்ய மறுக்கும் விடயத்தில் அதற்கான காரணங்களை அவர் குறிப்பிடுதலும் வேண்டும்.

5. ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகையவொரு படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பதிவுச் சான்றிதழ் முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, அதன்கண் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதலும் வேண்டும் ; அத்துடன் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தாதல் வேண்டும்.

6. பணிப்பாளர் தலைமையதிபதி, 4 ஆம் விதியின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றை, அப்பதிவுச் சான்றிதழ் எந்திரத்தொகுதியின் அல்லது சாதனங்களின் எந்தச் சொந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்தச் சொந்தக்காரர் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அல்லது விதிகளை அல்லது பதிவுச் சான்றிதழின் நியதி நிபந்தனைகளுள் எவற்றையும் மீறியுள்ளாரென அவர் திருப்திப்படின், இல்லாதொழிக்கலாம்.

7. (1) நான்காம் விதியின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்று, அப்பதிவுச் சான்றிதழ் முடிவுறுமுன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது புதுப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டுமென்துடன் இதற்கான இரண்டாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவொரு கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) பதிவுச் சான்றிதழொன்று, அப்பதிவுச் சான்றிதழ் எந்திரத் தொகுதியின் அல்லது சாதனங்களின் எந்தச் சொந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்தச் சொந்தக்காரர் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு அல்லது பதிவுச் சான்றிதழின் நியதி நிபந்தனைகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகியுள்ளாரெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படின் மட்டுமே அவரினால் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

8. பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் ஒவ்வோராளும் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

9. பணிப்பாளர் தலைமையதிபதி-

(அ) இவ்விதிகளின்கீழ் அதிகார சபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கனரக நிர்மாண எந்திரத் தொகுதியும் சாதனங்களும் எந்த இடாப்பில் பதியப்படுகின்றனவோ அந்த இடாப்பொன்று, இதற்கான மூன்றாம் அட்டவணையிற் தரப்பட்டுள்ள படிவமொன்றில் பேணப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அது கிரமமான முறையில் நாளதுவரையாக்கப்படுவதனைச் செய்வித்தலும் பொது மக்கள் அதனை அணுகக்கூடியதாகச் செய்தலும் வேண்டும்.

**முதலாம் அட்டவணை**

*கனரக நிர்மாண எந்திரத் தொகுதியும் சாதனங்களும் அவற்றின் சுருக்கீடுகளும்*

(விதி 2)

| இல. | கனரக நிர்மாண எந்திரத் தொகுதியும் சாதனங்களும் | சுருக்கீடுகள் |
|---|---|---|
| 1 | சில்லுச் சுமையேற்றி | WL |
| 2 | கரிக்கல் பவுசர் | BB |
| 3 | கருங்காரைப் பாவுநர் (தவழி வகை) | ASP-Cr |
| 4 | கருங்காரைப் பாவுநர் (சில்லு வகை) | ASP-W*l* |
| 5 | வளியியக்கவட்டுறை உருளி | PTR |
| 6 | நிலை உருளி | SR |
| 7 | அதிருகின்ற உருளி இரட்டை உருளைக்கலம்/தனி உருளைக்கலம் | VR |
| 8 | தவழி ஊர்தி | CT |
| 9 | பின்தோண்டிச் சுமையேற்றி | BL |
| 10 | நீர்ம அகழ்ந்தெடுப்பான் | EX |
| 11 | இயக்கு தரப்படுத்தி | MG |
| 12 | சறுக்கல் கடவற் சுமையேற்றி | SSL |
| 13 | தண்டப் பாரவண்டி | BT |
| 14 | கவை தூக்கி | FLT |
| 15 | அசையும் பாரந்தூக்கி | MCRN |
| 16 | கோபுரப் பாரந்தூக்கி | TCRN |
| 17 | தவழிப் பாரந்தூக்கி | CCRN |
| 18 | பதிகாற் பாரந்தூக்கிப் பொறி | PLM |
| 19 | கருங்காரைக் கலக்கும் பொறித்தொகுதி | ASPMP |
| 20 | நொறுக்கும் மற்றும் திரையீட்டுப் பொறித்தொகுதி | CRSH |
| 21 | உருளைக் கலத்திலிடப்பட்ட கரிக்கல் உருக்கி | DAM |
| 22 | கற்காரைக் கூறுகலக்கும் ஆலை | CBP |
| 23 | மணல் கழுவும் பொறித்தொகுதி | SWP |

## இரண்டாம் அட்டவணை

*கனரக நிர்மாண எந்திரத்தொகுதி மற்றும் சாதனங்களுக்கான பதிவுக் கட்டணமும் புதுப்பித்தற் கட்டணமும்*

(விதிகள் 3(1) மற்றும் 7(1))

| விவரணம் | பதிவுக் கட்டணம் அல்லது வருடாந்தப் புதுப்பித்தற் கட்டணம் |
|---|---|
| முதல் 25 எந்திரத் தொகுதிகளுக்காகவும் | ஒவ்வோர் எந்திரத் தொகுதிக்கும் ரூபா 1,000 |
| 26 ஆவது பொறியிலிருந்து 50 ஆவது பொறிவரை | ஒவ்வோர் எந்திரத் தொகுதிக்கும் ரூபா 750 |
| 51 ஆவது பொறியிலிருந்து 75 ஆவது பொறிவரை | ஒவ்வோர் எந்திரத் தொகுதிக்கும் ரூபா 500 |
| 76 ஆவது பொறியிலிருந்து 100 ஆவது பொறிவரை | ஒவ்வோர் எந்திரத் தொகுதிக்கும் ரூபா 300 |
| 101 ஆவது பொறிக்கு மேல் | ஒவ்வோர் எந்திரத் தொகுதிக்கும் ரூபா 100 |

மேற்படி கட்டணங்கள் ஏற்புடையற்பாலனவான வரிகளிலிருந்து தவிர்க்கப்பட்டன.

## மூன்றாம் அட்டவணை

*கனரக நிர்மாண எந்திரத் தொகுதி மற்றும் சாதனங்கள் பற்றிய இடாப்பு*

(விதி 9(அ))

| இல. | கனரக எந்திரத் தொகுதியின் அல்லது சாதனங்களின் சொந்தக்காரர்களினது பெயர், முகவரி மற்றும் தொடர்பு விபரங்கள். | கனரக நிர்மாண எந்திரத் தொகுதியின் அல்லது சாதனங்களின் வகையும் மாதிரியும். | கனரக நிர்மாண எந்திரத் தொகுதியின் அல்லது சாதனங்களின் மூலநாடு. | கனரக நிர்மாண எந்திரத் தொகுதி அல்லது சாதனங்கள் நிரந்தரமாக வைக்கப்பட்ட அமைவிடம் அல்லது முகவரி. | கனரக நிர்மாண எந்திரத் தொகுதியின் அல்லது சாதனங்களின் விசேடித்த தன்மை. | முதலாவது பதிவுத் திகதியும் நடப்புப் பதிவுக் காலப் பகுதியும். | பதிவிலக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |

04-414

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.